முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 யூலை

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2023-08-20
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**கவனமாக வாசிக்கவும்**):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு* : 15 *நிமிடங்கள்*
*விடையெழுத* : 03 *மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 01

அவுஸ்திரேலிய குடிமகனான **ஜாஸன்** என்பவர் 2022 மே 01 ஆம் திகதி தொடக்கம் மூன்று வருடங்களுக்கு இலங்கையிலுள்ள அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலய அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவருக்கு கொழும்பில் தொடர்மாடி வீடொன்று வழங்கப்பட்டதுடன் அவருடைய சம்பளம் அவுஸ்திரேலியா விலுள்ள அவரது வங்கிக் கணக்கிற்கு தொடர்ச்சியாக வைப்புச் செய்யப்படும்.

கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர், அவர் வரிமதிப்பாண்டு 2022/23 முழுவதும் இலங்கையில் தங்கியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரிமதிப்பாண்டு 2022/23 இற்கான இலங்கையின் வரிவிதிப்பு நோக்கங்களுக்கு **ஜாஸனின்** வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 02

**ரணசிங்க** என்பவர் அவரது குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயரத் திட்டமிட்டுள்ளதுடன் வரி மதிப்பாண்டு 2022/23 காலப்பகுதியில் கீழ்வரும் மூலதன விற்பனை தொடர்பான பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருந்தார்:

| சொத்து வகை | கொள்வனவுக் கிரயம் / 2017 செப்ரெம்பர் 30 இல் பெறுமதி (ரூபா) | தரகருக்கான கட்டணம் (ரூபா) | பெற்ற மறுபயன் (consideration) (ரூபா) |
|---|---|---|---|
| தளபாடங்களுடன் நிரந்தர வதிவிடம் | 98,500,000 | 5,000,000 | 110,000,000 |
| சதுப்பு நிலம் – மினுவாங்கொடை | 8,000,000 | 500,000 | 9,200,000 |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி பரிவர்த்தனைகள் தொடர்பில் **ரணசிங்க** செலுத்த வேண்டிய மூலதன வருவாய் வரியை (CGT) **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) CGT திரட்டினை **ரணசிங்க** தாக்கல் செய்ய வேண்டிய உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (01 புள்ளி)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**சிறிபால** மற்றும் **குணபால** ஆகியோர் இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு **குணசிறி பேக்கர்ஸ்** என்ற பெயரில் பங்குடமை வியாபாரமொன்றை நடத்திச் செல்கின்றனர். **சிறிபாலவுக்கு** இரண்டு மகன்கள் உள்ளதுடன், **குணசிறி பேர்க்கஸ்** இலிருந்து கிடைக்கும் அவரது இலாபப் பங்கினை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு புதிய பங்குடமை உடன்படிக்கையொன்றை அவர்களுடன் செய்து கொண்டுள்ளார்.

**குணசிறி பேக்கர்ஸ்ஸிடமிருந்து சிறிபாலவுக்கு** கிடைக்கும் இலாபத்தின் அரைவாசி மாத்திரமே புதிய பங்குடமையின் வருமானமாகும்.

**சிறிபால** மற்றும் அவரது மகன்களுக்கிடையில் செல்லுபடியான பங்குடமையொன்று இல்லை எனக் குறிப்பிட்டு, அவர்களுக்கிடையிலான உடன்படிக்கையை உதவி ஆணையாளர் சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

*A.A. Davordboy* எதிர் *CGIR* என்ற வழக்கு மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தி, வரி நோக்கங்களுக்காக **சிறிபால** மற்றும் அவரது மகன்களுக்கிடையில் செல்லுபடியான (வலிதான) பங்குடமையொன்று உள்ளதா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட VFC (தனியார்) கம்பனி** சப்பாத்துகளை இறக்குமதி செய்து, உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனி பெறுமதிசேர் வரிக்கும் (VAT) சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிக்கும் (SSCL) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனிக்குப் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட கணக்காளர், கீழ்வரும் பகுதிகள் தொடர்பில் அடிப்படையான ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக உங்களை அணுகியுள்ளார் ; வரி ஆலோசகர் என்ற வகையில்;

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) VAT சட்டத்தின்படி, ஒரு வலிதான வரி விபரப்பட்டியலில் (tax invoice) உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று (03) உருப்படிகளை (items) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) சப்பாத்துகளின் புரள்வு (turnover) மீதான SSCL இன் பொருத்தமான வரி வீதத்தைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட சுப்பர் (தனியார்) கம்பனியானது** பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட ஒரு கம்பனியாகும். இக்கம்பனி பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. மேலும், இது இறக்குமதி செய்யப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கிறது. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டின் காலப்பகுதியில் இடம்பெற்ற விற்பனைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT உள்ளடக்கப்படாத):

| | ரூபா |
|---|---:|
| உள்நாட்டுச் சந்தையில் பாதுகாப்பு உபகரணங்களின் விற்பனை | 8,540,000 |
| உள்நாட்டு சேவைநாடுநர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் | 14,580,000 |
| பழைய அலுவலக தளபாடத்தின் விற்பனை | 74,000 |

(2) கம்பனியானது காலாண்டின் காலப்பகுதியில் கீழ்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியுள்ளது:

| | ரூபா |
|---|---:|
| பாதுகாப்பு உபகரணத்தின் இறக்குமதி மீது | 1,465,000 |
| உள்நாட்டு கொள்வனவுகள் மீது | 1,234,000 |
| சேவைநாடுநர்களின் இடங்களுக்குச் செல்வதற்காக அலுவலர்களால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் பழுதுபார்ப்புகள் மீது | 22,500 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 454,000/-.

(4) கம்பனி மாதாந்த VAT தவணைக்கட்டணங்களாக ரூபா 200,000/- செலுத்தியிருந்தது.

*(நியம VAT வீதம் 15% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ரன்சிஹன (தனியார்) கம்பனி** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2021 மே 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதுடன் அது தனது வணிகச் செயற்பாடுகளை அதே திகதியில் ஆரம்பித்திருந்தது. இக்கம்பனி ஆபரணங்களைத் தயாரிக்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. இந்தக் கம்பனி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான வருமான வரித் திரட்டினை இன்னும் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், வரிமதிப்பாண்டின் காலப்பகுதியில் எவ்வித வருமான வரிக் கொடுப்பனவுகளையும் செய்திருக்கவில்லை.

உதவி ஆணையாளர் தனது தீர்மானத்தின் அடிப்படையில் தவறிய மதிப்பீடொன்றை அனுப்பியுள்ளார். கம்பனியானது எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக உங்களை நியமிக்க விரும்புகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 195 இன்படி, கம்பனியால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியாக நியமிக்கப்படக்கூடிய நான்கு (04) நபர்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வருமான வரித் திரட்டினைச் சமர்ப்பிக்கத் தவறியமைக்கான பொருத்தமான தண்டங்களை (penalties) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) "சுய மதிப்பீடு (Self-Assessment)" மற்றும் "தவறிய மதிப்பீடு (Default Assessment)" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**சிரானி** மற்றும் **இரானி** ஆகிய இரு நண்பிகளால் முன்னெடுக்கப்படும் ஒரு பங்குடமையான **சிரானி புளோரா** நுவரெலியாவில் ஒரு பூந்தோட்டத்தைப் பராமரிக்கிறது. அவர்கள் இலாப, நட்டங்களை முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்வதற்கு இணங்கியுள்ளனர்.

2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது:

| | ரூபா |
|---|---|
| மொத்த இலாபம் | 6,750,000 |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் (மொத்த) | 2,100,000 |
| | **8,850,000** |
| கழி: நிருவாக மற்றும் விநியோகச் செலவினங்கள் | (3,250,000) |
| **பங்குடமையின் நிகர இலாபம்** | **5,600,000** |

மேலுள்ள இலாபத்தைக் கணிக்கும்போது கீழ்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன:

(1) இரு பங்காளர்களும் மாதாந்தச் சம்பளமாக ஒருவருக்கு ரூபா 135,000/- என்ற அடிப்படையில் எடுத்துக் கொள்கின்றனர்.

(2) பூக்கன்றுகள் **சிரானிக்குச்** சொந்தமான காணியில் வளர்க்கப்படுவதுடன், இதற்கான நில வாடகையாக ஒவ்வொரு மாதமும் ரூபா 80,000/- செலுத்தப்படுகிறது.

(3) முதியோருக்கான நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பு ஏற்பாடுகளுக்காகத் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரும ஸ்தாபனம் ஒன்றிற்கு வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் ரூபா 300,000/- நன்கொடையாக அளிக்கப்பட்டது.

(4) **இரானியின்** கணவர் பங்குடமையின் முகாமையாளராகப் பணியாற்றுவதுடன் ஆண்டின்போது அவருக்கு சம்பளமாக ரூபா 600,000/- செலுத்தப்பட்டுள்ளது.

(5) ஆண்டின் காலப்பகுதியில், ரூபா 3,600,000/- கிரயத்தில் உயர் தொழினுட்ப விவசாய இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டதுடன் நிருவாகச் செலவினங்களின் கீழ் தேய்மானமாக ரூபா 360,000/- பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2022/23 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**ஹை டெக் பீ.எல்.சீ.** இன் துணைக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட மொடேர்ன் டெக் (தனியார்) கம்பனி** இசைக் கருவிகளை இறக்குமதி செய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளது.

கீழ்வரும் தகவல்கள் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட மொடேர்ன் டெக் (தனியார்) கம்பனியின்** நிதிக் கூற்றுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. *(வரி மதிப்பாண்டு 2022/23 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரித் திருத்தங்கள், காலப் பகுதியைப் பொருட்படுத்தாது வரி மதிப்பாண்டு முழுமைக்கும் பொருத்தமானது எனக் கருதுக)* :

(1) அனைத்து செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு அனைத்து வருமானங்களும் வரவிடப்பட்டதன் (crediting) பின்னர் 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 86,850,000/-. கம்பனியின் மொத்தப் புரள்வு (turnover) ரூபா 785,000,000/-.

(2) பிற வருமானங்களின் கூறுகள்:

| | ரூபா |
|---|---|
| வாடகை வருமானம் (மொத்த) | 6,000,000 |
| நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் (மொத்த) | 10,700,000 |
| பங்கிலாப வருமானம் – நிகர WHT | 2,850,000 |
| கணினி உபகரண விற்பனை மீதான இலாபம் | 1,200,000 |

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு:

| சொத்துகள் (கிரயம்) | 2022.04.01 இல் மீதி (ரூபா) | சேர்ப்பனவுகள் / கொள்வனவுகள் (ரூபா) | விற்பனைகள் (ரூபா) | 2023.03.31 இல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| காணி | 8,250,000 | - | - | 8,250,000 |
| அலுவலகக் கட்டடம் | 7,900,000 | - | - | 7,900,000 |
| மோட்டார் வாகனங்கள் | - | 6,500,000 | - | 6,500,000 |
| கணினி உபகரணம் | 14,200,000 | - | 4,850,000 | 9,350,000 |
| **மொத்தம்** | **30,350,000** | **6,500,000** | **4,850,000** | **32,000,000** |

- கம்பனி தன்னிடமிருந்த பழைய கணினிகளை ரூபா 1,200,000/- இற்கு விற்பனை செய்திருந்தது.
- ஆண்டின் காலப்பகுதியில் விநியோக வான் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
- விசேடமாகக் குறிப்பிடப்பட்டால் அன்றி, அனைத்து சொத்துக்களும் கம்பனி அதன் வணிகச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும்போது 2017 மே மாதம் கொள்வனவு செய்யப்பட்டவை ஆகும்.

(4) நிருவாகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன:

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 5,650,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 3,432,000/-.

- ஆதனத்தை வாடகைக்கு விடுவது தொடர்பாக வாடகை உடன்படிக்கையை கைச்சாத்திடு வதற்கு சட்டச் செலவுகளாக ரூபா 90,000/- செலவழிக்கப்பட்டது.
- வரி மதிப்பாண்டு காலப்பகுதியில், ரூபா 1,000,000/- கிரயத்தைச் செலவிட்டு, IT பயிற்சிக்காக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிற்கு தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

(5) விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:

- கம்பனியின் எதிர்கால வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதற்காக ரூபா 452,000/- செலவு செய்யப்பட்டது.
- பணத்தை வசூலிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்ட பின்னர், கம்பனி ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 325,000/- வியாபாரக் கடனை பதிவழிப்பு செய்திருந்தது. இதற்காக முன்னைய ஆண்டில் எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், வருமானக் கூற்றிற்குச் செய்யப்பட்ட ஐயக்கடனுக்கான பொது ஏற்பாடு ரூபா 620,000/-.
- கம்பனி ரூபா 1,800,000/- பெறுமதியான IT உபகரணங்களை பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கியிருந்தது.

(6) நிதிச் செலவினங்கள், பெறப்பட்ட தொழிற்படு மூலதனக் கடனுக்காக தாய்க் கம்பனிக்குச் (holding company) செலுத்திய வட்டி ரூபா 550,000/- இனை உள்ளடக்கியுள்ளது.

(7) ஆண்டின் காலப்பகுதியில் பணியிலிருந்து விலகிய ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடையாக ரூபா 560,000/- செலுத்தப்பட்டிருந்தது.

(8) நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் 2023 பெப்ரவரியில் கிடைக்கப்பெற்றதுடன், நிலையான வைப்புகளுக்கான வட்டி வருமானத்தில் நிறுத்தி வைத்தல் வரியாக (WHT) / முற்பண வருமான வரியாக (AIT) வங்கியினால் ரூபா 535,000/- கழிக்கப்பட்டது.

(9) வரி மதிப்பாண்டு 2022/23 இற்கான சுய மதிப்பீட்டு அடிப்படையில் செலுத்தப்பட்ட வரிகள் ரூபா 13,125,000/-.

(10) வணிகத்தின் ஏனைய அனைத்துச் செலவினங்களும் வருமான வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2022/23 இற்காக **வரையறுக்கப்பட்ட மொடேர்ன் டெக் (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி

*(குறிப்பு: ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

ஒரு வதிவுள்ள தனியாளான **ஆனந்தா** என்பவர் ஒரு சட்ட வழக்கறிஞர் ஆவார். அவர் இலங்கையிலுள்ள வர்த்தக வங்கியொன்றில் சட்ட அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

**ஆனந்தா** தொடர்பான கீழ்வரும் தகவல்கள் வரி மதிப்பாண்டு 2022/23 *(இதன் பின்னர் 'ஆண்டு' எனக் குறிப்பிடப்படும்)* தொடர்பாகத் தரப்பட்டுள்ளன. :

*(வரி மதிப்பாண்டு 2022/23 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வருமான வரித் திருத்தங்கள், காலப் பகுதியைப் பொருட்படுத்தாது வரி மதிப்பாண்டு முழுமைக்கும் பொருத்தமானது எனக் கருதுக.)*

(1) ஊழியத்திலிருந்தான (Employment) வருமானம்:

- மொத்தச் சம்பளம் - மாதமொன்றுக்கு ரூபா 300,000/-.
- அரை மாதச் சம்பளத்திற்குச் சமனான ஒரு மிகையூதியக் கொடுப்பனவு 2022 டிசெம்பரில் செலுத்தப்பட்டது.
- எரிபொருள் கொடுப்பனவு (Fuel allowance) – மாதமொன்றுக்கு ரூபா 60,000/-.
- ஆண்டின் காலப்பகுதியில், அவர் இருதய சத்திரசிகிச்சைக்கு உட்பட்டிருந்ததுடன் மொத்த வைத்தியசாலைக் கட்டணமான ரூபா 500,000/- இனையும் செலுத்துவதை 2022 நவெம்பரில் கம்பனி பெறுப்பேற்றுக் கொண்டது. கம்பனியின் அனைத்து முழு நேர ஊழியர்களுக்கும் சமமான விதிமுறைகளில் மருத்துவ நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன.
- கம்பனி, சாரதியுடனான ஒரு வாகனத்தை (1500 CC) வழங்கியுள்ளது.
- ஆண்டிற்கான தனியாள் முற்பண வருமான வரி (APIT) ரூபா 856,800/- கழிக்கப்பட்டுள்ளது.

(2) அவர் நொத்தாரிசு அலுவலகம் ஒன்றை வைத்திருப்பதுடன் ஆண்டிற்கான அதன் கொள்ளல், கொடுத்தல் விபரங்கள் கீழ்வருமாறு:

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| சேவைநாடுநர்கள் மூலமான வருமானம் | | 4,370,000 |
| **கழி:** கொடுப்பனவுகள் | | |
| உதவியாளருக்கான சம்பளம் | 600,000 | |
| சேவைநாடுநர்களுக்கான கேளிக்கைகள் | 200,000 | |
| அலுவலகச் செலவினங்கள் | 660,000 | |
| போட்டோபிரதி இயந்திரத்தின் கொள்வனவு | 330,000 | (1,790,000) |
| **நிகர இலாபம்** | | **2,580,000** |

(3) ஆண்டின் காலப்பகுதியில், **ஆனந்தா** கீழ்வரும் வட்டி வருமானங்களைப் பெற்றுள்ளார்:

| விபரம் | பெற்ற திகதி | தொகை (ரூபா) |
|---|---|---|
| திறைசேரி உண்டியல் மீது | 2022.11.01 | 900,000 |
| நண்பருக்கு கொடுத்த கடன் மீது | 2023.02.01 | 50,000 |

(4) **ஆனந்தா** சில விலைகோரப்பட்ட கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்துள்ளதுடன், 2022 டிசெம்பரில் பங்கு வர்த்தகத்தின் மூலம் ரூபா 740,000/- வருமானத்தை ஈட்டியுள்ளார்.

(5) விலைகோரப்பட்ட பொதுக் கம்பனிகளிலிருந்து 2023 சனவரியில் கிடைக்கப்பெற்ற பங்கிலாப வருமானம் (கிடைத்த பங்கிலாபத்திலிருந்து செலுத்தப்பட்டது) ரூபா 450,000/-.

(6) 2022 டிசெம்பரில், மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு ரூபா 250,000/- இனை அவர் நன்கொடையாக வழங்கியிருந்ததுடன் சிறுவர் இல்லமொன்றைப் பராமரிக்கின்ற தரும ஸ்தாபனம் ஒன்றுக்கு 2023 பெப்ரவரியில் ரூபா 50,000 இனையும் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

(7) அவர் தனது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலுக்காக 2022 டிசெம்பரில் ரூபா 50,000/- அனுசரணை வழங்கியிருந்தார்.

(8) அவர் வரி மதிப்பாண்டு 2022/23 இற்கான தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 600,000/- செலுத்தியிருந்தார்.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

வரிமதிப்பாண்டு 2022/23 இற்கு **ஆனந்தாவுக்காக** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிவிதி வருமானம்.

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி.

(c) செலுத்த வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்திய) மீதி வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் விரிவிதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |